PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 1 - 2014

PRIMARY 6

TAMIL LANGUAGE PAPER 2

**தாள் 2: BOOKLET A & B**

பெயர் : ______________ (   )    மதிப்பெண் : __________ /90


வகுப்பு : P6/ ____________    நேரம் : 1 hr 40mins

கட்டளைகள்

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

வினா 2

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை/கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| உடற்பயிற்சிப் பாடம் | பந்தை எத்தினார்கள் |
| திட்டம் தீட்டினர் | இரைச்சலாக இருந்தது |
| பொய் சொல்லி | ஏசினார் |
| கழிவறை | நடுங்கினார்கள் |

**1 வேற்றுமை** 'அ' பிரிவு

**Q1** முதல் **Q6** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

அன்று அந்த மண்டபத்தில் பாட்டுக் கச்சேரி ஒன்று நடக்கவிருந்தது. அதைக் காண பெருங்கூட்டம் கூடியிருந்தது. பரதனின் (1) ________ ஒரு வீணை வித்துவானும் மிருதங்க கலைஞரும் இருந்தனர். அவர்கள் இருவரும் சகோதரர்கள். (2)__________ காண கூட்டம் நிரம்பியது. (3)________ வந்தோர் அவர்களின் கச்சேரியில் மூழ்கினர். அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. ஒருவழியாக கச்சேரி முடிந்தது. அனைவரும் மண்டபத்தை விட்டு வெளியேறினர். வீணை வித்துவானும் மிருதங்க கலைஞரும் தங்கள் (4) __________ எடுத்துக்கொண்டு மண்டபத்திலிருந்து வெளியேறினார்கள்.

அப்போது அவர்கள் சற்றும் எதிர்பார்க்காத வகையில் வெளியே கூட்டம் கூடியிருந்தது. (5)_________ ஒன்றும் புரியவில்லை. திடீரென்று கூட்டம் அவர்களை நோக்கி வந்தது. கூட்டத்தினர் அவர்களை சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தார்கள். அவர்களைப் பாராட்டி , மக்கள் பரிசு மழை பொழிந்தனர். கலைஞர்கள் இருவருக்கும் (6)__________ வெளியேற பல மணி நேரம் ஆனது. ஆனால், அப்பாராட்டுகள் அனைத்தும் தங்கள் கலைகளுக்குக் கிடைத்த வெற்றி என்று அறிந்தபோது அவர்கள் ஆனந்தத்தோடு வீடு திரும்பினர்.

Q1. (1) குழுவில்
(2) குழுவை
(3) குழுவுக்கு
(4) குழுவால்

Q2. (1) கச்சேரியுடன்
(2) கச்சேரியின்
(3) கச்சேரியில்
(4) கச்சேரியை

Q3. (1) நிகழ்ச்சியுடன்
(2) நிகழ்ச்சிக்கு
(3) நிகழ்ச்சியின்
(4) நிகழ்ச்சியில்

Q4. (1) வாத்தியங்களை
(2) வாத்தியங்களில்
(3) வாத்தியங்களுக்கு
(4) வாத்தியங்களோடு

Q5. (1) அவர்களில்
(2) அவர்களுக்கு
(3) அவர்களது
(4) அவர்களை

Q6. (1) கூட்டத்தை
(2) கூட்டத்தில்
(3) கூட்டத்திலிருந்து
(4) கூட்டத்தின்

## 2 செய்யுள் / பழமொழி

**Q7** முதல் **Q12** வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு (12 மதிப்பெண்கள்)

Q7. ஈவது ________________.

(1) கைவிடேல்
(2) இகழேல்
(3) விளம்பேல்
(4) விலக்கேல்

Q8. ________________ அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

(1) அறிஞர்க்கு
(2) மந்திரிக்கு
(3) உண்டிக்கு
(4) வறிஞர்க்கு

Q9. நிழலின் ________________ வெயிலில் தெரியும்.

(1) பெருமை
(2) தண்மை
(3) அருமை
(4) குளுமை

Q10. ஒரு கை ________________ ஓசை எழும்புமா?

(1) உடைந்தால்
(2) ஆட்டினால்
(3) தட்டினால்
(4) கொடுத்தால்

Q11. மகன்தந்தைக்கு ________________ உதவி இவன்தந்தை

என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) ஆற்றும்
(2) போற்றும்
(3) செய்யும்
(4) கொடுக்கும்

Q12. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது ________________.

(1) அழுக்கு
(2) இழுக்கு
(3) கிறுக்கு
(4) செருக்கு

**3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரில் செல்வந்தன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு நண்பன் இருந்தான். நண்பன் ஆப்பிள் செடியைப் பயிரிட்டு வளர்த்து வந்தான். ஒருநாள் செல்வந்தனுக்கு அவனுடைய நண்பன் ஓர் ஆப்பிள் செடியைப் பரிசளித்தான். "வீட்டின் அருகில் அதனை நட்டுவை. நல்ல உயர்ந்தரகப் பழம் தரும்," என்று நண்பன் கூறினான்.

செல்வந்தன் தனக்குக் கிடைத்த பரிசை எண்ணி **அகமகிழ்ந்தான்.** ஆப்பிள் செடியை எங்கே நடுவது என்று யோசித்தான். " சாலையோரத்தில் நட்டால், வருவோரும் போவோரும் அல்லவா பழங்களைப் பறித்துச் சாப்பிடுவார்கள்! அல்லது எனது நிலத்தில் நட்டால்........ ? பக்கத்து நிலத்துக்காரர் அவற்றைப் பறித்துக் கொள்வார். வீட்டின் அருகில் நட்டாலோ, அங்கு சிறுவர்கள் பறித்துச் சாப்பிடுவார்கள்." என்று அவன் தன் மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

இறுதியாக, ஆப்பிள் செடியை யாருக்கும் தெரியாத ஒதுக்குபுறமான இடத்தில், ஒரு தோப்பின் **மத்தியில்** மரங்கள் அடர்ந்த பகுதியில் அவன் நட்டு வைத்தான். ஆனால், அவ்விடத்தில் சூரிய ஒளி இல்லாததால், விரைவிலேயே ஆப்பிள் செடி பட்டுவிட்டது.

இதனைக் கேள்விப்பட்ட செல்வந்தனின் நண்பன் கோபப்பட்டான். "ஏன் அப்படிப்பட்ட மோசமான இடத்தில் ஆப்பிள் செடியை நட்டாய்?" என்று அவன் கேட்டான்.

அதற்குச் செல்வந்தன், "தெருவில் நட்டால் வழிப்போக்கர்கள் பழத்தைப் பறித்துச் சாப்பிடுவர். என் நிலத்தில் நட்டால், அடுத்த நிலச் சொந்தக்காரர் பழத்தைப்

பறிக்க வந்துவிடுவார். வீட்டின் அருகில் நட்டால் சிறுவர்கள் பறிப்பார்கள். வேறு எங்குதான் நடுவது?" என்றான்.

"அப்படியாவது ஆப்பிள் செடி மக்களுக்கு **உபயோகப்பட்டிருக்கும்**. ஆனால், இப்பொழுதோ யாருக்கும் பயனின்றி அது பட்டுவிட்டது. நல்ல உயர்ந்த ஜாதி மரத்தை நீ இழந்துவிட்டாய்," என்று கூறி நண்பன் வருத்தப்பட்டான்.

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. செல்வந்தனுக்குக் கிடைத்த ஆப்பிள் செடி எத்தகைய தரமுடையது ?

(1) அது உயர்ந்த ஜாதி மரம்
(2) அது ஒரு பெரிய மரம்
(3) அது நண்பனுடைய விருப்பமான மரம்
(4) அது நண்பனின் பரிசு

Q14. ஆப்பிள் செடியைப் பெற்றதும் பணக்காரனுக்கு என்ன பிரச்சனை உண்டானது?

(1) செடியைப் பாதுக்காக்க வேண்டிய கவலை ஏற்பட்டது.
(2) பிறர் பழத்தை பறித்துச் சாப்பிடாமல் தடுப்பது எப்படி எனும் பிரச்சனை உண்டானது
(3) செடியை எங்கு ஒளித்து வைக்க வேண்டும் என்ற பிரச்சனை உண்டானது
(4) செடியை எங்கு நட்டு வைப்பது என்ற பிரச்சனை உண்டானது

Q15. ஆப்பிள் செடியைத் தோப்பில் நட ஏன் பணக்காரன் முடிவு செய்தான்?

(1) தோப்பில் உள்ள மண் தரம் கூடியது என்பதால்
(2) தோப்பில் ஆப்பிள் செடியை யாரும் அறியமாட்டார்கள் என்பதால்
(3) தோப்பில் வளர்ந்தால் செடி பச்சை பசுமையாக இருக்கும் என்பதால்
(4) தோப்பு பெரிய இடமாக இருப்பதால்

Q16. அச்செடி அழிவதற்கு என்ன காரணம் ?

(1) அதற்கு தண்ணீர் பற்றாக்குறையானது
(2) அதற்கு சூரிய ஒளி இல்லாததால்
(3) செடி நீரில் மூழ்கியதால்
(4) செடிக்கு வளர இடம் இல்லாததால்

Q17. நண்பன் எதனால் வருத்தப்பட்டான்?

(1) செடியை வீட்டின் அருகில் நட்டு வைக்கவில்லை என்பதால்
(2) செடியைப் பொது இடத்தில் நட்டு வைக்கவில்லை என்பதால்
(3) செடி யாருக்கும் உபயோகப்படவில்லை என்பதால்
(4) செல்வந்தன் தன் பேச்சைக் கேட்கவில்லை என்பதால்

## 4 சொற்பொருள்

**Q18** முதல் **Q20** வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.( 6மதிப்பெண்கள்)

Q18. அகமகிழ்ந்தான்

(1) பெருமையடைந்தான்
(2) ஆணவமடைந்தான்
(3) ஆனந்தமடைந்தான்
(4) ஆவேசமடைந்தான்

Q19. மத்தியில்


(1) நடுவில்
(2) பின்னால்
(3) முன்னால்
(4) மேலே

Q20. உபயோகப்பட்டிருக்கும்

(1) பயன்பட்டிருக்கும்
(2) உருவாகியிருக்கும்
(3) இயக்கப்பட்டிருக்கும்
(4) ஆற்றப்பட்டிருக்கும்

## 5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:



**அனந்தா பயண நிறுவனம்**

155 வில்லா வீதி, சிங்கப்பூர் 500332

தொலைபேசி: 63667933

புதிய கணினி நுட்பத் திறனுடன்

வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவை வழங்க

***அக்டோபர் 10*** முதல் எங்கள் நிறுவனம் **அல்பட் காட்டுக்கு** இடம் மாறுகிறது.

புதிய சேவைகளை எதிர்பாக்கலாம்.

**ஏர் இந்தியா விமான கட்டணப் பட்டியல்**

| நேரடிச் சேவை | பள்ளி விடுமுறை அல்லாத நாள்களில் 02.03.11 முதல் 25.05.11 வரை | | பள்ளி விடுமுறைகளில் 28.05.11 முதல் 25.06.11வரை | |
|---|---|---|---|---|
| | முதியவர் | சிறுவர் | முதியவர் | சிறுவர் |
| டெல்லி | $380 | $285 | $530 | $400 |
| மும்பாய் | $505 | $380 | $655 | $495 |
| சென்னை | $555 | $420 | $705 | $530 |

நிபந்தனைகள்:

1. விமான நிலைய வரியின் கட்டணம் தனி.
2. பயணத் தேதியை மாற்றினால் $50 கூடுதல் கட்டணம் செலுத்த நேரிடும்
3. பயணத்தை ரத்து செய்தால் பணம் திருப்பித் தரப்படாது
4. பயணச்சீட்டை *20.5.11* தேதிக்குள் வாங்கவேண்டும்.

**Q21** முதல் **Q23** வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள் )

Q21. அனந்தா பயண நிறுவனத்தில் எதை எதிர்பார்க்கலாம்?

(1) புதிய சேவைகளை எதிர்பார்க்கலாம் .

(2) புதிய கணினி நுட்பத் திறனை எதிர்பார்க்கலாம்

(3) புதிய விலையில் பயணச்சீட்டுகளை எதிர்பார்க்கலாம்.

(4) புதிய வாடிக்கையாளர்களுக்கு இலவச பயணச்சீட்டுகளை எதிர்பார்க்கலாம்

Q22. வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை மிச்சப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

(1) விடுமுறை அல்லாத நாட்களில் பயணம் செல்ல வேண்டும்.

(2) விமான நிலைய வரி கட்டவேண்டும்.

(3) "ஏர் இந்தியா" விமானத்தில் மும்பாய் செல்ல வேண்டும்.

(4) விடுமுறை நாட்களில் பயணம் செல்ல வேண்டும்.

Q23. வாடிக்கையாளர்கள் எதற்காகத் தனியாகப் பணம் செலுத்த வேண்டும்?

(1) விமானச் சலுகைக்காகப் பணம் செலுத்த வேண்டும்.

(2) பயணத்தை ரத்து செய்தால் பணம் செலுத்த வேண்டும்.

(3) விமான நிலைய வரிக்குப் பணம் செலுத்த வேண்டும்.

(4) 20.5.11 தேதிக்குப் பிறகு வாங்கினால் பணம் செலுத்த வேண்டும்.

‘ஆ’ பிரிவு

## 6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் **Q24** முதல் **Q28** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24. ராமன் இப்போது உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறான். அவன் தன் ____________ ஆசிரியரைக் காண தொடக்கப்பள்ளிக்குச் சென்றான். — Q24. (        )

Q25. தன் அத்தையின் திருமணத்திற்கு வந்திருந்தோரை அகிலன் அன்போடு வரவேற்று உபசரித்தான்.அவன் அனைவருக்கும் பலவகை குளிர்ச்சியான ____________ வழங்கினான். — Q26. (        )

Q26. சென்ற மாதம் ஆஸ்திரேலியாவின் பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தது. அதனால், ஏற்பட்ட ____________ மக்கள் பலர் தங்கள் உடைமைகளை இழந்தனர். — Q25. (        )

Q27. முதியவர் ஒருவர் சாலையைக் கடக்கச் சிரமப்பட்டார். நான் அவர் மீது ____________ கொண்டு அவருக்கு உதவி செய்தேன். — Q27. (        )

Q28. அம்மா சமையலுக்கு வேண்டிய காய்கறிகளை எடுத்து மேசையில் வைத்தார். நான் அவற்றை __________ வைத்தேன். — Q28. (        )

| | |
|---|---|
| (1) வெல்லத்தால் | (2) முன்னால் |
| (3) இறக்கம் | (4) பாணங்களை |
| (5) முன்னாள் | (6) அறிந்து |
| (7) அரிந்து | (8) வெள்ளத்தால் |
| (9) பானங்களை | (10) இரக்கம் |

## 7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் **Q29** முதல் **Q35** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

மாவீரன் அலெக்சாண்டர் மாபெரும் வெற்றிகளை அடைந்து, ஊர் திரும்பும் வழியில் ஓர் ஆண்டியைக் கண்டான். " நீ யார்?" என்று ஆணவத்துடன் அலெக்சாண்டர் ஆண்டியைப் பார்த்துக் கேட்டான். ஆனால் அந்த ஆண்டியோ சிறிதும் அச்சமோ கவலையோ இன்றி "நீ யார்?" என்று பதிலுக்குக் கேட்டான். அலெக்சாண்டர் (Q29)___ , நீ முதலில் சொல் , பிறகு என்னைப் பற்றி சொல்கிறேன்," என்றான்.

"நான் (Q30)___ சக்கரவர்த்தி ! " என்று உதடு நலுங்காமல் சொன்னான் ஆண்டி. அதைக் கேட்ட அலெக்சாண்டர் திகைத்து , "உலகத்தை வெல்ல நான் எவ்வளவு கஷ்டப் படுகிறேன். நீயோ மிகவும் (Q31)___ உலகத்தின் சக்கரவர்த்தி என்கிறாயே? இதென்ன வேடிக்கை?" என்று வியந்தான். " என் கோபத்தைச் சீண்டிப் பார்க்க நினைக்கிறாயா?" என்று மாவீரன் அலெக்சாண்டர் ஆண்டியை மிரட்டினான்.

" அது (Q32)___. ஒரு சக்கரவர்த்தியின் லட்சணத்தைக் காண வேண்டுமானால் என் அருகில் அமர்ந்திருக்கும் துறவியின் (Q33)___ பார். அதில் அமைதி தாண்டவமாடும். அச்சமோ ஆத்திரமோ, படபடப்போ இருக்காது," என்று (Q34)___ ஆண்டி.

ஆண்டி சொன்னது போலவே அந்தத் துறவியின் முகத்தில் அமைதியும் அன்பும் காட்சியளித்தது. . அதைக் கண்ட அலெக்சாண்டர் தன் (Q35)___ உணர்ந்து , ஆண்டிக்கு தலை வணங்கினான். அறிவுக்கு முன்னே வீரம் தலை வணங்கியது.

Q29. ( )
Q30. ( )
Q31. ( )
Q32. ( )
Q33. ( )
Q34. ( )
Q35. ( )

| | | |
|---|---|---|
| (1) என்பதை | (2) முகத்தை | (3) ஒன்றுமில்லை |
| (4) திகைத்து | (5) அலட்சியமாக | (6) பிழையை |
| (7) ஆத்திரமடைந்து | (8) விளக்கமளித்தான் | (9) உலகத்தின் |
| (10) அதட்டி | (11)அறியலாம் | (12) விழித்து |

**D8 சுயவிடைக் கருத்தறில்**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

**Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. ( 20 மதிப்பெண்கள்)**

ஓர் ஊரில் பண்ணையார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பிராணிகள் என்றால் உயிர். அவரது மாளிகையில், நாய், பூனை மற்றும் கிளிகள் வளர்ந்து வந்தன. அவைகளைப் பராமரிக்கவே அவருக்கு நேரம் சரியாக இருக்கும். அவரது பேரப்பிள்ளைகளும் அவைகளுக்கு என்னென்ன பிடிக்குமோ அவற்றைக் கொடுத்துப், பிரியமாகப் பழகி வந்தனர்.

அவர்களது வீட்டில், நாயும் பூனையும் ஒன்றாகவே சேர்ந்து விளையாடும். வேலை செய்பவர்கள் யாவரும் அவற்றை ஆச்சிரியமாகப் பார்ப்பார்கள். இரண்டுமே குட்டிப் போட்டு இருந்தன. அதனால் யாரையுமே பக்கத்தில் கூட சேர்க்காது. ஆனால், முதலாளியையும், அவரது பேரப்பிள்ளைகளையும் மட்டும் ஒன்றும் செய்யாது.

ஒரு நாள் பூனை, சாலையைக் கடந்து போகும் போது, வாகனம் ஒன்று அதை மோதிவிட்டுச் சென்றது. பூனை அந்த இடத்திலேயே பரிதாபமாக் மாண்டு போனது. செய்தி அறிந்த பண்ணையார் வாகனம் ஒட்டுனரைப் பிடித்து அடித்துவிட்டார். அன்று முதல் அவரின் மனம் சரியில்லை. அவரும் அவரது பேரப்பிள்ளைகளும் அன்று இரவு சாப்பிடவில்லை. செல்லமாக வளர்த்த பூனை இறந்தது ஒரு புறம் கவலையாக இருந்தாலும், அதன் குட்டிப்பூனை, தன் தாயை இழந்து தவிப்பதைப் பார்த்து பண்ணையாரால் தாங்க முடியவில்லை. எதற்கும் அசையாத அவர், அன்று கண் கலங்கினார். குட்டிப்பூனைக்குப் புட்டிப்பால் கொடுத்தும் அது குடிக்கவில்லை. என்னென்னவோ செய்தும் அதன் சோகத்தைத் தவிர்க்க முடியவில்லை.

இதையெல்லாம், தாய் நாய் பார்த்துக்கொண்டு இருந்தது. தனது நண்பன் இல்லாததைத் தெரிந்துகொண்டு கண்ணீர் வடித்தது. பூனைக்குட்டியைப் பரிதாபமாகப் பார்த்தது. பூனைக் குட்டியும் நாயைப் பார்த்தது. பாலுக்கு ஏங்கியது. அந்த நேரத்தில் தாய் நாயின் மடியில் அதனுடைய குட்டிகள், பாலைக் குடிக்க ஓடி வந்தன. மூன்று குட்டிகளும், மூன்று மடிகளில் பாலைக் குடித்தன. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பூனைக்குட்டியும் ஓடிவந்து, நாயின் மடியில் பாலைக் குடிக்க

ஆரம்பித்தது. நாயும் மகிழ்ச்சியில் அமைதியாக இருந்தது. தன் குழந்தை போலவே அதையும் சேர்த்து வளர்த்து வந்தது. பண்ணையாருக்கு இப்போது கவலையெல்லாம் பறந்து போயின. மறுபடியும் தோட்ட வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. பண்ணையார் எவ்வாறு தன் நேரத்தைச் செலவழித்தார்? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

37. பண்ணையாரின் பேரப்பிள்ளைகள் பிராணிகளை எப்படிக் கவனித்தனர்? (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

38. பண்ணையாரின் வேலையாட்கள் எதைக் கண்டு வியந்தனர்? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

39. பண்ணையாரால் எத்தகைய துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை? (4)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

40. தாய்நாய் எவற்றைக் கவனித்தது? (4)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

41. பண்ணையாரின் மகிழ்ச்சிக்கான காரணம் என்ன? (4)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

P6 SA1

Primary - 6 TESTPAPER 7

அன்று அந்த மண்டபத்தில்.........

1. 1 2. 4 3. 2 4. 1 5. 2 6. 3

7. 4 8. 1 9. 3 10. 3 11. 1 12. 2

13. 1 14. 4 15. 2 16. 2 17. 3

18. 3 19. 1 20. 1

21. 1 22. 4 23. 3

24. 5 25. 9 26. 8 27. 10 28. 7

29. 7 30. 9 31. 5 32. 3 33. 2 34. 8 35. 6

36. பிராணிகளிடம் அன்பு கொண்ட பண்ணையார், தனது மாளிகையில் தான் வளர்த்த நாய், பூனை மற்றும் கிளிகள் போன்றவற்றைப் பராமரிப்பதிலேயே தனது நேரத்தைச் செலவழித்தார்.

37. பண்ணையாரின் பேரப்பிள்ளைகள் அவருடைய செல்லப்பிராணிக்கு என்னென்ன பிடிக்குமோ அவற்றைக் கொடுத்துப், பிரியமாகப் பழகி வந்தார்கள். இவ்வாறு அவர்கள் பிராணிகளைக் கவனித்தனர்.

38. பண்ணையாரின் வீட்டில் நாயும் பூனையும் சேர்ந்து விளையாடும் காட்சியைக் கண்டே பண்ணையாரின் வேலையாட்கள் வியந்தனர்.

39. பண்ணையார் செல்லமாக வளர்த்த பூனை இறந்ததையும், குட்டிப்பூனை அதன் தாயைப் இழந்து தவிக்கும் துன்பத்தையும் பண்ணையாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

40. பண்ணையார் கண் கலங்குவதையும், குட்டிப் பூனைக்குப் புட்டிப்பால் கொடுத்தும் அது குடிக்காதையும், என்ன செய்தும் அதன் சோகத்தைத் தவிர்க்க முடியாததையும் தாய் நாய் கவனித்தது.

41. தாய்நாயின் குட்டிகள் அதன் மடியில் பால் குடிக்க ஓடி வந்ததும், குட்டிப் பூனைக்குட்டியும் நாயின் மடியில் பால் குடிக்க வந்தபோது தாய்நாய் மகிழ்ச்சியுடன் அமைதியாக இருந்ததையும், அது குட்டிப் பூனைக்குட்டியைத் தன் குழந்தையைப் போலவே வளர்த்ததைப் பார்த்ததுமே பண்ணையாரின் மகிச்ச்சிக்குக் காரணமாகும்.